## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

**முன்னிலை : திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் செவ்வாய்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை திங்கள் 15ம் நாள்

### ஆண்டுபட்டிகை வழக்கு எண்.27/2026

CNR No.TNDG100024902025

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.300/2025

எதிரிகளின் பெயர் –

1. ஆண்டிச்சாமி 55/2025 த/பெ.சின்னச்சாமி,
2. துரைராஜ் 61/2025 த/பெ.பிச்சன் அம்பலம்,
3. செல்லம் (எ) செல்வம் 54/2025 த/பெ.மணிக்காளை
4. முத்துச்சாமி 50/2025 த/பெ.பழனி,
5. கண்ணன் 46/2025 த/பெ.வெள்ளைச்சாமி
6. வீரப்பன் 52/2025 த/பெ.குருந்தப்பன்
7. தயாளன் 47/2025 த/பெ.திருமால்

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | 1. ஆண்டிச்சாமி 55/2025 த/பெ.சின்னச்சாமி, கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 25.06.2025 | 01.07.2025 |
| | | | 2. துரைராஜ் 61/2025 த/பெ.பிச்சன் அம்பலம், | 25.06.2025 | 01.07.2025 |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:09 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 25.06.2025 | 01.07.2025 |
| | | | 3. செல்லம் (எ) செல்வம் 54/2025 த/பெ.மணிக்காளை கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 25.06.2025 | 01.07.2025 |
| | | | 4. முத்துச்சாமி 50/2025 த/பெ.பழனி, கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 25.06.2025 | 01.07.2025 |
| | | | 5. கண்ணன் 46/2025 த/பெ.வெள்ளைச்சாமி கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 25.06.2025 | 01.07.2025 |
| | | | 6. வீரப்பன் 52/2025 த/பெ.குருந்தப்பன் கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 25.06.2025 | 01.07.2025 |
| | | | 7. தயாளன் 47/2025 த/பெ.திருமால் கிழக்கு தெரு, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 24.06.2025 | 20.11.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | | 03.03.2026 தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட 1 முதல் 7 எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 351(2) BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 இ.த.சவின் கீழும் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | | Nil | | |
| | | | Nil | | |
| (vi) | Date of | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:13 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Examination in Chief and Cross | | | | | |
| | | | PW1 | திரு.விஜய் (கண்ணுற்ற சாட்சி) | 09.04.2026 | 09.04.2026 |
| | | | PW2 | திரு.சேவுகன் (கண்ணுற்ற சாட்சி) | 09.04.2026 | 09.04.2026 |
| | | | PW3 | திரு.முருகேசன் (பார்வைமகஜர் சாட்சி) | 09.04.2026 | 09.04.2026 |
| | | | PW4 | திரு.கிருஷ்ணகுமார் (புலன்விசாரணை அதிகாரி) | 18.04.2026 | 18.04.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | | 22.04.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | வாதி பச்சையம்மாளை எதிரிகள் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து PACL இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தில் ஏஜென்டாக சேர்ந்து விட்டுள்ளீர்கள். வாதி பச்சையம்மாளும் சில நபர்களை அந்த நிறுவனத்தில் சேர்த்து அவர்களிடம் பணம் வசூல் செய்து மேற்படி நிறுவனத்தில் கட்டி வந்துள்ளார். இந்நிலையில் மேற்கண்ட PACL இந்தியா லிமிடெட்டை மூடிவிட்டதால் அதில் பணம் கட்டிய மக்களும், ஏஜெண்டுகளும் வாதி பச்சையம்மாளிடம் பணம் கேட்ட நிலையில், 22.06.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு வாதி பச்சையம்மாள் அவரது வீட்டின் முன்பு இருந்தபோது அந்த வழியாக வந்த மேற்படி எதிரிகளிடம் உங்களை நம்பிதான் PACL நிறுவனத்தில் ஏஜென்டாக சேர்ந்து பொதுமக்கள்கிட்ட பணம் வசூல் பண்ணி அதில் கட்டினேன் இப்ப அந்த நிறுவனத்தை மூடிட்டாங்கன்னு சொல்லி பணம் கட்டியவங்க என்கிட்ட வந்து கேக்குறாங்க என கேட்டதற்கு, மேற்படி எதிரிகள் அனைவரும் சேர்ந்து வாதி பச்யைம்மாளை பார்த்து எங்ககிட்ட எதுக்குடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிட்டு இருக்க தேவிடியா, கண்டாரஓலி மகளே என்று வாதி பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது வெளியில் அசிங்கமாக பேசி இனிமே இந்த பணம் விசயமா எங்ககிட்ட பேசுனா உன்ன இந்த இடத்திலேயே அடிச்சு கொன்றுவோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக 1 முதல் 7 எதிரிகள் மீது 296(b), 351(2) BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 ன் கீழும்குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:22 +0530

| | | |
|---|---|---|
| நீதிபதியின் தீர்மானம் | : | குற்றவாளிகள் இல்லை |
| தண்டனை (அ) உத்தரவு | : | இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, இவ்வழக்கின் 1 முதல் 7 எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 351(2) BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரிகளை 271(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.<br><br>எதிரிகள் நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 30.01.2026ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 22.04.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் திரு.V.சதாசிவம் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:26 +0530

என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –**

வாதி பச்சையம்மாளை எதிரிகள் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து PACL இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தில் ஏஜென்டாக சேர்ந்து விட்டுள்ளீர்கள். வாதி பச்சையம்மாளும் சில நபர்களை அந்த நிறுவனத்தில் சேர்த்து அவர்களிடம் பணம் வசூல் செய்து மேற்படி நிறுவனத்தில் கட்டி வந்துள்ளார். இந்நிலையில் மேற்கண்ட PACL இந்தியா லிமிடெட்டை மூடிவிட்டதால் அதில் பணம் கட்டிய மக்களும், ஏஜெண்டுகளும் வாதி பச்சையம்மாளிடம் பணம் கேட்ட நிலையில், 22.06.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு வாதி பச்சையம்மாள் அவரது வீட்டின் முன்பு இருந்தபோது அந்த வழியாக வந்த மேற்படி எதிரிகளிடம் உங்களை நம்பிதான் PACL நிறுவனத்தில் ஏஜென்டாக சேர்ந்து பொதுமக்கள்கிட்ட பணம் வசூல் பண்ணி அதில் கட்டினேன் இப்ப அந்த நிறுவனத்தை மூடிட்டாங்கன்னு சொல்லி பணம் கட்டியவங்க என்கிட்ட வந்து கேக்குறாங்க என கேட்டதற்கு, மேற்படி எதிரிகள் அனைவரும் சேர்ந்து வாதி பச்யைம்மாளை பார்த்து எங்ககிட்ட எதுக்குடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிட்டு இருக்க தேவிடியா, கண்டாரஓலி மகளே என்று வாதி பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது வெளியில் அசிங்கமாக பேசி இனிமே இந்த பணம் விசயமா எங்ககிட்ட பேசுனா உன்ன இந்த இடத்திலேயே அடிச்சு கொன்றுவோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 26.06.2025ம் தேதி 296(b), 351(2) BNS பிரிவு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:32 +0530

தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 19.02.2026ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதிய அவகாசம் அளித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் 03.03.2026ம் தேதியன்று எதிரிகள் மீது பிரிவு 296(b), 351(2) BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழ் குற்றம் குறித்து பிரிவு 263 BNSS –ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:37 +0530

**6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

7. வாதி பச்சையம்மாளை எதிரிகள் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து PACL இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தில் ஏஜென்டாக சேர்ந்து விட்டுள்ளார்கள். வாதி பச்சையம்மாளும் சில நபர்களை அந்த நிறுவனத்தில் சேர்த்து அவர்களிடம் பணம் வசூல் செய்து மேற்படி நிறுவனத்தில் கட்டி வந்துள்ளார். இந்நிலையில் மேற்கண்ட PACL இந்தியா லிமிடெட்டை மூடிவிட்டதால் அதில் பணம் கட்டிய மக்களும், ஏஜெண்டுகளும் வாதி பச்சையம்மாளிடம் பணம் கேட்ட நிலையில், 22.06.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு வாதி பச்சையம்மாள் அவரது வீட்டின் முன்பு இருந்தபோது அந்த வழியாக வந்த மேற்படி எதிரிகளிடம் உங்களை நம்பிதான் PACL நிறுவனத்தில் ஏஜென்டாக சேர்ந்து பொதுமக்கள்கிட்ட பணம் வசூல் பண்ணி அதில் கட்டினேன் இப்ப அந்த நிறுவனத்தை மூடிட்டாங்கன்னு சொல்லி பணம் கட்டியவங்க என்கிட்ட வந்து கேக்குறாங்க என கேட்டதற்கு, மேற்படி எதிரிகள் அனைவரும் சேர்ந்து வாதி பச்யைம்மாளை பார்த்து எங்ககிட்ட எதுக்குடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிட்டு இருக்க தேவிடியா, கண்டாரஓலி மகளே என்று வாதி பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது வெளியில் அசிங்கமாக பேசி இனிமே இந்த பணம் விசயமா எங்ககிட்ட பேசுனா உன்ன இந்த இடத்திலேயே அடிச்சு கொன்றுவோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபரான பச்சையம்மாள் என்பவர் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் புகார் மனு கொடுத்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:44 +0530

8. மேற்படி புகார்மனுவானது நத்தம் காவல்நிலையத்திற்கு அனுபப்பட்டுள்ளது. SP/G3/2445/15504/25, Date : 24.06.2025 ன் பிரகாரம் வரப்பெற்ற தபாலை நத்தம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.4 பார்வையிட்டு நத்தம் காவல் நிலைய குற்ற எண்.300/2025, பிரிவுகள் 296(பி), 351(2) BNS and 4 of TNPHW Act–ன் கீழ் **அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.** 24.06.2025ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடமான செந்துறை மங்களப்பட்டியில் உள்ள பச்சையம்மாள் என்பவரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் அ.சா.3 முருகேசன், பட்டியல் சாட்சி 5 சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் **அ.த.சா.ஆ.4** வரைபடம் வரைந்து **அ.த.சா.ஆ.5** பார்வை மகஜர் தயார் செய்துள்ளார்.

9. பின்னர் சாட்சிகளான ராஜா, விஜய், சேவுகன், முருகேசன், சிவலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து 1 முதல் 7 எதிரிகளை கைது செய்து வழக்கின் புலன் விசாரணையை முடித்து 26.06.2025ம் தேதி எதிரிகள் மீது பிரிவு 296(பி), 351(2) BNS and 4 of TNPHW Actன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

10. அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் பற்றி பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன் படி 22.04.2026ம் தேதி கேள்விகள் கேட்டபோது, எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:46:49 +0530

இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

11. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தங்களது வாதத்தில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

12. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கின் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இடம்பெறவில்லை என்றும் வாதிட்டார். மேலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் எதிரிகளை விடுதலை செய்யுமாறு வேண்டினார்கள்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:46:57 +0530

**14) <u>தீர்வு</u>**

14.1) பச்சையம்மாள் அளித்த புகார்மனுவில் "நான் PACL இந்தியா லிமிடெட்டில் 2009 ஆம் ஆண்டில் இருந்து ஏஜென்டாக இருந்து வருகிறேன். எனக்கு கீழே ஏஜென்ட் ஆக 70 நபர்கள் இருக்கிறார்கள். மொத்தம் நாலு கோடி ரூபாய் வசூல் செய்து மேற்கண்ட கம்பெனியில் கட்டி உள்ளேன். 2018 ஆம் ஆண்டு மேற்கண்ட PACL இந்தியா லிமிடெட் மூடிவிட்டார்கள். காலி செய்து விட்டு போய் விட்டார்கள். மேற்கண்ட நிறுவனத்தில் பணம் செலுத்திய அனைவரும் என்னை பணத்தை வாங்கி கொடு என்று என்னை தரக்குறைவாக பேசுகிறார்கள். எனவே எனது குடும்பத்தில் உள்ள நபர்களும் என்னை கண்டபடி திட்டுகிறார்கள். என்னை மேற்படி கம்பெனிக்கு அறிமுகப்படுத்தி சேர்த்து விட்ட கீழ்கண்ட எதிரிகள் 7 பேர் ஆவார்கள். மேற்கண்ட நபர்கள் மீதும் PACL இந்தியா லிமிடெட் கம்பெனி மீதும் நடவடிக்கை எடுத்து மேற்கண்ட நான் ஏஜெண்டுகள் மூலம் கட்டிய பணத்தை மீட்டுக் கொடுக்குமாறு கோரியுள்ளார்." அரசு தரப்பில் இவ்வழக்கின் வாதியானவர் புகார் கொடுத்த தினம் அன்றே தற்கொலைக்கு முயன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சுயநினைவின்றி இருந்து, அதன் பின்பு இறந்துவிட்டார் என்றும், அதனால் மனுதாரரை புலன் விசாரணை அதிகாரியால் விசாரிக்க முடியவில்லை என்றும், புகார்தாரரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்களா என்பதை குறித்து சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:01 +0530

14.2) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 விஜய் அவர்கள் அளித்துள்ள சாட்சியத்தை பரிசீலனை செய்த வகையில், "இவ்வழக்கின் பட்டியல் முதலாவது சாட்சி ராஜா என் உறவினர் ஆவார். அவர் காலமாகிவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் பட்டியல் 4வது சாட்சி முருகேசன் என்பவரின் அக்கா இறந்துவிட்டதாக பட்டியல் 5வது சாட்சி சிவலிங்கம் என்பவர் மங்களப்பட்டியில் உள்ள சாட்சி 4ன் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அப்போது அங்கு வந்த போலீசார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ குளித்த சம்பவம் குறித்து விசாரணைக்கு வந்திருந்ததாக கூறி என்னிடம் விசாரணை செய்தார்கள். மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேற்படி சாட்சி தனக்கு வழக்கு சம்பவம் தெரியும் என்றோ, எதிரிகள் பச்சையம்மாளை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ தெரிவிக்கவில்லை. அரசு தரப்பில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக காட்டப்பட்டிருந்தாலும், அவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு உள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.3) சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் காட்டப்பட்டுள்ள மற்றொரு சாட்சியான அ.சா.2 சேவுகன் தனது சாட்சியத்தில் " இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் இறந்துபோன பச்சையம்மாள் என்பவரை தெரியும். இவ்வழக்கின் பட்டியல் முதலாவது சாட்சி ராஜா என்பவரை தெரியும். அவர் காலமாகிவிட்டார். அவர் பச்சையம்மாள் என்பவரின் தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளில் முத்துச்சாமி,

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:47:09 +0530

ஆண்டிச்சாமி, துரைராஜ் மற்றும் செல்வம் ஆகியோரை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை பார்த்திருக்கிறேன், ஆனால் அவர்கள் பெயர் தெரியாது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் பச்சையம்மாள் என்பவர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ குளித்துவிட்டதாகவும், மறுநாள் இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். எதனால் இறந்தார், என்ன நடந்தது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது" என்று சாட்சியமளித்து அவர் அரசு தரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேற்படி சாட்சியும் எதிரிகள் பச்சையம்மாள் என்பவரிடம் பிரச்சனை செய்ததாகவோ, அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் சம்பவம் நடைபெற்றதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. இவ்வழக்கில் பச்சையம்மாள் என்பவரின் உடன்பிறந்த சகோதரரான பட்டியல் சாட்சி 1 ராஜா என்பவர் இறந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டு அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14.4) பார்வைமகஜர் சாட்சியான அ.சா.3 முருகேசன் தனது சாட்சியத்தில் "சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் என் அக்கா வீட்டின் அருகில் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து என் அக்காவின் வீடு மற்றும் ஊரைப் பற்றிய விபரங்களையும் விசாரணை செய்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக என் அக்கா தீ குளித்து இறந்தது சம்பந்தமாக பேப்பர் விளம்பரத்தை பார்த்து PACL நிறுவனத்தில் என் அக்கா வேலை செய்தது சம்பந்தமான பிரச்சனையால் இறந்ததாக தெரிந்து கொண்டேன் என்று சாட்சியமளித்து அவர் தனது குறுக்குவிசாரணையில் "போலீசார்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:14 +0530

கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் வாங்கினார் என்றால் சரிதான். எனது அக்கா எதற்காக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளதன் மூலம் பார்வைமகஜர் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

14.5) புலன்விசாரணை அதிகாரியான அ.சா.5 கிருஷ்ணகுமார் தனது குறுக்குவிசாரணையில் "பச்சையம்மாள் தனது புகாரில் மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து எதிரிகளிடம் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் பணம் கட்டிய நபர்கள் பணத்தைக் கேட்டு அசிங்கமாக பேசியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். குடும்பத்தில் உள்ள நபர்களும் என்னை கண்டபடி திட்டுகிறார்கள் என்று பச்சையம்மாள் புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள், பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாக புகார் மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யாரும் PACL நிறுவனத்தில் நிறுவனராகவோ, மேலாளராகவோ இல்லை என்றால் சரிதான். PACL நிறுவனத்தின் இயக்குநர்கள், மேலாளர்கள், பணியாளர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1, அ.சா.1, 2 ஆகியோரை விசாரித்து PACL நிறுவனத்தில் பச்சையம்மாள் பணம் கட்டியது தொடர்பான ஆவணங்களை கைப்பற்றவில்லை என்றால்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:21 +0530

சரிதான். பச்சையம்மாள் குடும்ப நபர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14.6) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் பச்சையம்மாள் கொடுத்த புகார் மனுவில் குற்ற இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் எதிரிகள் பொது இடத்தில் வைத்து அவரை அசிங்கமான வார்த்தைகளால் பேசி, கொலைமிரட்டல் விடுத்து, அவரை மானபங்கம் செய்யும் விதத்தில் நடந்து கொண்டதாக குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும் எந்த தேதியில், எந்த நேரத்தில் சம்பவம் நடைபெற்றது என்பதும் தெரிவிக்கவில்லை. எனவே குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகள் அனைவரும் சேர்ந்து வாதி பச்யைம்மாளை பார்த்து எங்ககிட்ட எதுக்குடி பணம் கேட்டு தொந்தரவு பண்ணிட்டு இருக்க தேவிடியா, கண்டாரஓலி மகளே என்று வாதி பச்சையம்மாளை பெண் என்றும் பாராமல் பொது வெளியில் அசிங்கமாக பேசி இனிமே இந்த பணம் விசயமா எங்ககிட்ட பேசுனா உன்ன இந்த இடத்திலேயே அடிச்சு கொன்றுவோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பு சாட்சியங்கள் அமையவில்லை. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியான பச்சையம்மாள் புகார் மனு கொடுத்த தினம் அன்றே தற்கொலைக்கு முயன்று சுயநினைவின்றி சிகிச்சையில் இருந்து இறந்து விட்டதாலும், பட்டியல் சாட்சி 1 ராஜா இறந்து விட்டதாலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக கூறப்படும் அ.சா.2 மற்றும் அ.சா.3 அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ள நிலையிலும், பார்வைமகஜர் சாட்சியே மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்ததாக கூறியுள்ள

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:26 +0530

நிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்பதே கேள்விக்குறியாகியுள்ள நிலையிலும், புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு அரசு தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வர இயலாது. எனவே, எதிரிகள் மீதான பிரிவுகள் 296(பி), 351(2) BNS and 4 of TNPHW Actன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

**<u>தீர்வு</u>**

இறுதியாக, எதிரிகள் மீதான பிரிவுகள் 296(b), 351(2) BNS மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகள் இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**15. <u>பிரிவு 498 BNSSன் கீழான உத்தரவு:</u>**

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 498 BNSS–ன் கீழ் உத்தரவு இல்லை.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:33 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 28.04.2026ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள் –</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 09.04.2026 | திரு.விஜய் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.2 | 09.04.2026 | திரு.சேவுகன் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | 09.04.2026 | திரு.முருகேசன் (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.4 | 18.04.2026 | திரு.கிருஷ்ணகுமார் (புலன்விசாரணை அதிகாரி) |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.3 | 24.06.2025 | புகார் மனுவில் உள்ள புகார்தாரரின் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.3 | 24.06.2025 | பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.4 | 24.06.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.4 | 24.06.2025 | மாதிரி வரைப்படம் |
| அ.த.சா.ஆ.5/ அ.சா.4 | 24.06.2025 | பார்வை மகஜர் |

**<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :</u>**– இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u>**– இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:47:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>குறிப்பு –</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:47:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.